RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1980

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இராமன் காட்டும் அறம்

**நா. கிருஷ்ணவேணி [அ, *], கோ. இராஜேஸ்வரி [அ]**

[அ] தமிழ்த்துறை, அ.வீ.வா.நி. ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது), பூண்டி-613503, தமிழ்நாடு, இந்தியா

# The Virtues shown by Rama in the Nalaiyira Divya Prabandham

**N. Krishnaveni [a, *], G. Rajeswari [a]**

[a] Department of Tamil, A.V.V.M. Sri Pushpam College (Aotonomous), (Affiliated to Bharathidasan University), Poondi-613503, Tamil Nadu, India

* Corresponding Author: kvram2016@gmail.com

Received: 02-08-2022
Revised: 17-10-2022
Accepted: 28-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Virtue, wealth, happiness, and home/body are considered important for the lives of the people of the world. The first of them is a virtue. Morality is essential for individual life. All Tamil literature is based on the emphasis on morality. In Ramaavatharam, the incarnation of Tirumal, in his way of life, it is mentioned in the article on the virtue of Rama in his life, about his love and brotherhood without getting angry, to make sacrifices with love and brotherhood, to be friendly with good people, and to the manner in which he attains the Lord in the way of grace, and the manner in which he attains to the Lord in the way of grace, and the manner in which Rama has performed a hymn in his life, and how the Azhwars composed the hymns of the Lord as their refuge. The morality of the eleven scriptures found in the Pathinen Kilkanakku books is explained as evidence. The concepts of virtue and the semantic explanation of virtue are given. The virtues found in the shrines where the Azhwars sang imagining Thirumala as Rama is explained.

**Keywords:** Domesticity, Asceticism, Ekapathinivrathan, Discipline, Aalvars.

## முன்னுரை

உலக மக்களின் வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்று அறமாகும். அறத்தைக் கடைபிடிப்பதால் தனிமனித ஒழுக்கம் மற்றும் சமுதாய ஒழுக்கமும் சீர்பட்டு அமையும். அத்தகைய அறத்தைத் தன் வாழ்வில் அறநிலை நாயகனான இராமன் கடைபிடித்து பெரியோரை மதித்து அன்பு கொண்டு அனைவருடனும் நட்புறவு கொண்டு தமக்குத் தீமை செய்தோருக்கும் நன்மை செய்து ஏகபத்தினி விரதனாக இருந்து நன்மக்களைப் பெற்று நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பாசுரங்களாக இயற்றியுள்ளனர். அதனையே இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## அறம்

“அறம்”

அறம் எனப்படுவது,

“அன்பாய் இருப்பது அறம்

இனிமையாய்ப் பேசுவது அறம்

கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது அறம்

நல்லதையே நாடுவது அறம்

மனதில் குற்றம் இல்லாமல் இருப்பது அறம்

பொய், சினம், பொறாமை, உணர்ச்சி ஆகியவற்றைத் தவிர்ப்பது அறம்

பிறருக்குக் கெடுதல் செய்யாமை அறம்

பிறருடன் பகிர்ந்து உண்பது அறம்

பிற உயிர்களைக் கொல்லாமை அறம்

தீமையில்லாத வழியில் பொருளீட்டுவது அறம்

இல்லற வாழ்வில் ஈடுபடுவது அறம்

அறநூல்களைக் கற்று அடக்கமுடன் இருப்பது அறம்

தூயவரைப் பேணுவது அறம்

மானத்துடன் வாழ்வது அறம்

உயிருக்கு ஊக்கம் தருவது அறம்

அருள் வழியில் ஆண்டவனை உணர்த்துவது அறம்" என்பதாகும்.

## அறம் - சொற்பொருள் விளக்கம்

அறம் என்ற சொல்லிற்கு அபிதான சிந்தாமணி இல்லறம், துறவறம் என்று இருவகையாகப் பிரித்து இலக்கணம் கூறுகிறது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி அறம் என்பதற்கு இருபது வகையான பொருள்களைத் தருகின்றது.

அறம் என்ற சொல்லிற்கு இணையான ஆங்கிலச்சொல் 'எதிக்ஸ்' (Ethics) என்பர். எதிக்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லின் மூல வடிவு கிரேக்க மொழியில் உள்ளது. கிரேக்க மொழியில் பழக்கவழக்கங்கள், பண்பு என்னும் பொருளையும் உணர்த்துகிறது.

கிரேக்கநாட்டுத் தத்துவ ஞானிகளான சாக்ரடீசும், பிளேட்டோவும் 'அறமே அறிவு, அறிவே அறம்' எனக் கூறியுள்ளனர். 'அறம் என்பது அறிந்துகொள்ள முடியாத தெய்வீகமான மறைபொருளாகும்' என்று பிளேட்டோ தெளிவுபடுத்தியுள்ளார்.

'ஒழுக்கம் பற்றிய அறிவியலே அறம்' என்பதாகும் என்பது ஜாக்சனின் கருத்தாகும். முயற்சியோடு வாழ்க்கையைக் கொண்டு செல்வதே அறம் என யவன மஞ்சரி குறிப்பிடுகின்றது.

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய

மும்முறை பொருட்டும் உரிய என்ப"

என்பது தொல்காப்பியம். இலக்கியங்களில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளும் இடம் பெற்றாலும் அவற்றில் முதலிடம் அறத்திற்கே உரியது என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

## ஆய்வு முறை

மனிதனின் வாழ்க்கைக்கு அறம், பொருள், இன்பம் என முக்கியமாகக் கருதப்பட்டாலும் அறமே முதன்மையானதாகக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் அனைத்து நூல்களிலும் அறம் பற்றிய கருத்துகள் காணப்பட்டு இருந்தாலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பதினொன்று நூல்கள் அறநூல்களாகக் காணப்படுகின்றன. அவை நாலாயிர திவ்யப் பிரபந்த காலத்திற்கு முற்பட்டதாக

இருப்பதால் ஆழ்வார்கள் அந்நூல்களின் அறத்தினைக் கொண்டும் பாசுரம் இயற்றியுள்ளனர். அறநிலை நாயகன் இராமன் தன் வாழ்வில் அறநிலையினைத் தவறாது பின்பற்றமையையும் ஆழ்வார்கள் சிறப்புற பாசுரத்தில் இயற்றியுள்ளனர். ஆகையால் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அறநூல்களின் அறத்திணை ஒப்பீடாக இல்லாமல் சான்றாக இக்கட்டுரையில் வழங்கப்பட்டுள்ளது.

## நாலாயிர திவ்யப் பிரபந்தம்

வைணவ கடவுளான திருமாலின் பெருமைகளையும் உலக மக்கள் யாவரும் உய்வு பெற அவர் எடுத்த அவதாரங்களைப் பற்றியும் ஆழ்வார் இறைவனின் அம்சங்களாகத் தோன்றி அவர்களால் எழுதப்பெற்றது நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆகும். கடந்த காலத்தில் இறைவன் மனிதனாகப் பிறந்து நிலைநாட்டிய அறத்தினைக் கூறி ஆழ்வார்கள் அதனைப் பின்பற்றி வாழ்ந்து எதிர்கால சந்ததியினர் வாழ்வில் ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ அமைக்கப்பெற்ற நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்து வழங்கியுள்ளார் (Kamalanathan, 2002).

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்களான திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி என்னும் பதினொரு நூல்களிலும் மனித வாழ்வில் செய்யக்கூடியவை, செய்யக் கூடாதவை, அறம் தவறினால் ஏற்படும் இன்னல்கள், அறத்தினைப் பின்பற்றி வாழ்ந்தால் ஏற்படும் நன்மைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளது. எனினும் காலத்தால் முற்பட்டு இருந்தாலும் இராமன் வாழ்ந்த காலம் அவரது அறச்செயல்கள் யாவும் ஆழ்வார்களால் இயற்றப்பட்டு அவற்றைப் பின்பற்றி இயற்றப்பட்ட நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும். அவ்வாறு பின்பற்றப்பட்ட அறநிலை நாயகனின் அறத்தினை இனிக் காணலாம் (Subramaniyan, 2012).

இராமனைப் பற்றி மதுரகவியாழ்வார் தவிர ஏனைய பதினொரு ஆழ்வார்கள் இராமனாகவும், இராமனாகப் பாவித்தும் பாடியுள்ளனர். அவ்வாறு பாடிய திருத்தலங்கள் மற்றும் ஆழ்வார்கள் பற்றிய குறிப்புகள் அட்டவணை 1-யில் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1. ஆழ்வார்கல் இராமனாகப் பாடிய திருத்தலங்களின் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன

| வ. எண். | ஆழ்வார் | நூல் | திருத்தலம் |
|---|---|---|---|
| 1. | பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு | திருவரங்கம் |
| 2. | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி | திருச்சித்திரக்கூடம் |
| 3. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி | திருநறையூர்<br>திருவேங்கடம்<br>திருவல்லிக்கேணி<br>திருநீர்மலை |
| 4. | நம்மாழ்வார் | திருவாய்மொழி | திருக்கடித்தானம் |

## அன்பாய் இருப்பவன்

இராமன் இராவணனை அழித்து விபீஷணனுக்கு ஆட்சி வழங்கினான். கொடுஞ்செயல் புரிந்த இராவணனை அழித்து பகைவன் தம்பி என சினம் கொள்ளாமலும், விபீஷணனிடம் அன்பு கொண்டும், தன் சிற்றன்னை காட்டிற்கு போ என்று கூறியதை ஏற்று அடக்கமுடன் அன்பாய் இராமன் காடு

சென்றது சிறந்த அறம் என்பதனை திருப்பல்லாண்டில் பெரியாழ்வார் அன்பாய் இருப்பது அறம் என்பதனைச் சிறப்புற பாசுரம் இயற்றியுள்ளார்.

"தென் இலங்கை

மின் இலங்கும் பூண் விபீடண நம்பிக்கு"

என் இலங்கும் நாமத்து அளவு அரசு என்ற

எனத் திருவரங்கப் பெருமானை இராமனாகவும் பாவித்துப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002).

குலசேகராழ்வாரும் அன்பாய் இருப்பது அறம் என்பதனையும் விளக்க குகனுடன் கொண்ட அன்பு, தம்பி பரதனுக்கு அரசாட்சி வழங்கி வனம் சென்று சுக்ரீவனுடன் அன்பு கொண்டவன் இராமன் ஆவான். அவன் சித்திரக்கூட மலையில் எழுந்தருளியுள்ளான் எனச் சிறப்பித்துள்ளமையைக் காணலாம்.

"தொத்து அலர்பூஞ் சுரிகுழல் கைகேசி சொல்லால்

தொல்நகரம் துறந்து துறைக் கங்கை தன்னைப்

பக்தி உடைக் குகன் கடந்த வனம் போய்ப் புக்கு

பரதனுக்கு பாதுகமும் அரசு ஈந்து"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002). இதனை அன்பாய் இருப்பதே அறம் என்பதனை விளக்க திருவள்ளுவர் திருக்குறளில் அன்புடைமை என்னும் அதிகாரத்தில்,

"அன்பீனும் ஆர்வம் உடைமை அஃதீனும்

நன்பெண்ணும் நாடாச் சிறப்பு"

என்றும் குறள் வாயிலாகக் கூறியுள்ளார் (Subramaniyan, 2012).

## உயிருக்கு ஊக்கம் தந்து மனதில் குற்றமில்லாமல் இருப்பவன்

பறவை இனமான சடாயுவுக்கு ஈமக்கடன்களைச் செய்து அதனை வைகுந்தம் ஏற்றி உயிருக்கு ஊக்கம் தருவது அறம் என்பதனை,

"தனம் மருவு வைதேகி பிரியல் உற்று

தளர்வு எய்திச் சடாயுவை வைகுந்தம் ஏற்றி"

என மனைவியைப் பிரிந்த பொழுதிலும் அறச்செயல் தவறாமல் இருந்தவன் இராமன் எனப் புகழ்ந்துரைத்துள்ளார் (Kamalanathan, 2002).

இராவணனைக் கொன்று அயோத்திக்கு திரும்பி அரசாட்சி ஏற்றுத் தன் சுயசரிதத்தைத் தன் பிள்ளைகளான குசலவர்கள் வாயிலாகக் கேட்டான் என்று கூறியுள்ளார். தான் கொன்ற இராவணனின் சித்தத்தை இராமன் அகத்தியர் மூலம் கேட்டான். இதில் மனதில் குற்றம் இல்லாமல் இருப்பது அறம் என்பது விளக்கப்பட்டுள்ளது. இப்பாசுரத்தில்,

"அம்பொன் நெடு மணிமாட அயோத்தி எய்தி

அரசு எய்தி அகத்தியவன்வாய்த் தான முன்கொன்றான்

தன் பெருந்தொல்கதைகேட்டு மிதிலைச் செல்வி

உலகு உய்யத்திரு வயிறு வாய்த்த மக்கள்

செம்பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்பான்"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002). மனதில் குற்றமில்லாமல் முகமலர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர்,

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்

இன்சொ லினதே அறம்"

என்று கூறியுள்ளார் (Subramaniyan, 2012).

## அன்னையின் ஆணையை ஏற்றவன்

சிறிய தாய் கைகேயி ஆணையை ஏற்று அரசு முடியைத் தியாகம் செய்த இராமன் திருவல்லிக்கேணியில் உள்ளான் எனத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். பெரியோரை மதித்து நடத்தல் சிறந்த அறம் என்பதனைக் காட்டியுள்ளார்.

"விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்

வேழமும் பாகனும் வீழ

சிற்றவை பணியால் முடிதுறந்தானைத்

திருவல்லிக் கேணிக் கண்டேனே"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002). அரசன், ஆசிரியன், தாய், தந்தை, உடன்பிறந்தோர் இவர்களை மதித்துத் தொழ வேண்டும் என்பதே நல்லொழுக்கம் ஆகிய அறம் என ஆசாரக் கோவையில் யாவரும் கூறிய நெறி என்பதில்,

"அரசன் வொத்தியான் தாய்தந்தை தம்முன்

நிகரில் குரவரில் ஐவர் இவரிரைத்

தேவரைப் போலத் தொழுக என்பதே

யாவரும் கண்ட நெறி"

என்பதாகும் (Subramaniyan, 2012).

## ஆழ்வாரை ஆட்படுத்தியவன்

நம்மாழ்வார் இராமனின் நாமங்களைச் சொல்வதே சிறந்த அறம் ஆகும். அருள் வழியில் ஆண்டவனை அடையாமல் வீண்பொழுது கழித்து விட்டதாகப் பாசுரத்தில்,

"தெரிந்துணர்வு ஒன்று இன்மையால் தீவினையேன் வாளா

இருந்தொழிந்தேன் கீழ்நூல்கள் எல்லாம் கரந்துருவின்

அம்மாவான அந்நான்று பின்தொடர்ந்த ஆழி அங்கை

அம்மான் ஏத்தாது அமர்த்து"

எனக் கூறியுள்ளார் (Kamalanathan, 2002).

## ஆழ்வார் வேண்டுதல்

தன் வாழ்நாள் என்னும் வாழ்க்கைச் சாகரத்தை ஆழ்வார் இராமனையே கதியாக அடைந்து உன்னை விட்டு விலகாதபடி இருக்கும்படி ஆத்மாவை அடையப் பெற்றேன் எனவும் நம்மாழ்வார் பாசுரத்தில் சிறப்படையச் செய்துள்ளார்.

"நீள் கடல்சூழ் இலங்கைக் கோன்

தோள்கள் தலை துணி செய்தான்

தாள்கள் தலையில் வணங்கி

நாள் கடலை கழியினே" (Kamalanathan, 2002)

எனவும் அவனையே வணங்குவதாக,

"சேர்ந்தார் தீவினைகட்கு அருநஞ்சை திண் மதியை

தீர்ந்தார் தம் மனத்துப் பிரியாது அவன் உயிரை

சேர்ந்தே போகல் கொடாச் சுடரை அரக்கியை மூக்கு

ஈர்ந்தாயை அடியேன் அடைந்தேன் முதல் முன்னமே"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002).

## ஏகபத்தினி விரதன்

தாயின் ஆசையை தவறு என எண்ணி இராமன் ஏகபத்தினி விரதன் அதாவது ஒருவனுக்கு ஒருத்தி என்னும் அறத்தினைக் காப்பவன் அவன் ஏகபத்தினி விரதன் எனத் தாய் இரங்குவதாக நம்மாழ்வார் இராமனின் அறத்தினைப் பாசுரத்தில் அழகுபடுத்தியுள்ளார்.

"கொம்பு போல் சீதை பொருட்டு இலங்கை நகர்

அம்பு எரி உய்த்தவர்தான் இணைமேல் அணி

வம்பு அவிழ் தண் அம் துழாய் மலர்க்கே இவன்

நம்புமால் நான் இதற்கு என் செய்வேன் நங்கைமீர்?"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002).

## ஆழ்வார் இரங்குதல்

தவறான பாதையில் சென்ற அரக்கரைக் கொன்று தன்னுடன் அழைத்துப் போவான். அவனது பாதத்தை ஆட்படுத்துவதே இன்பம் என இறைவனை சரணாகதி அடைதலே அறம், அதன் மூலம் வாழ்வில் வீடுபேற்றை அடையலாம் என நம்மாழ்வார் சிறப்பித்துள்ளார்.

"காண்டும் கொலோ நெஞ்சமே! கடிய வினையே முயலும்

ஆண் திறல் மீளி மொய்ம்மீன் அரக்கர் குலத்தை

மீண்டும் அவன் தம்பிக்கே விரிநீர் இலங்கை அருளி

ஆண்டு தன் சோதி புக்க அமரர் அரியேற்றினையே?"

என அழகுபடுத்தியுள்ளார் (Kamalanathan, 2002).

பொருளுள்ளவனுக்கு இன்பம் பெருகும். அருளுள்ளவனுக்கு அறம் விளையும். அருள் வழியில் ஆண்டவனை அடைதல் என்பதனை,

"வைத்தனர் ஆகும் வசை வணக்கம் நன்று ஆகச்

செய்தனான் ஆகும் செங்குலம் முன்செய்த

பொருளினான் ஆகும் ஆம் போகம் நெகிழ்ந்த

அருளினான் ஆகும் அறம்"

அருள் என்பது இறைவனது அருள். அதனைப் பெற அறம் செய்தால் நல்ல குடிப்பிறப்பும், அருளினால் அறம் என்னும் வீடுபேற்றை அடையலாம் என சிறுபஞ்சமூலமும் கூறுகிறது (Subramaniyan, 2012).

## தஞ்சம் என இராமனை அடையச் செய்தல்

அற நூல்களைக் கற்பது அறம் என்பதனை விளக்க இராமனது வரலாற்றினைப் படியுங்கள். அதுவே வாழ்வில் உய்வு பெற வழிவகுக்கும் எனச் சிறப்பித்துள்ளதை,

"கற்பவர் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ

புற்மா முதலாப் புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே

நற்பான் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்

நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே?"

என்னும் பாசுரம் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் (Kamalanathan, 2002).

உற்றார் உறவினர் நம்மிடம் காசு இருக்கும் வரை அதனை அனுபவித்துத் தீர்ந்தபின் விலகிச் செல்வர். ஆகையால் இராமனைத் தஞ்சம் அடையுங்கள் எனப் பாடி இறைவனை அடைதல் அறம் என்பதனை,

"துணையும் சார்வும் ஆகுவார்போல் சுற்றத்தவரும் பிறரும்

அணைய வந்த ஆக்கம் உண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்

கணை ஒன்றாலே ஏழ் மரமும் எய்த எம் கார்முகிலை

புனை என்று உய்யப் போகல் அல்லால் இல்லை கண்டீர் அரனே!"

எனக் கூறியுள்ளார் (Kamalanathan, 2002).

## பாரபட்சமற்ற நட்பு கொண்டவன்

நல்லவர்களோடு நட்பு கொள்ளுதல் அறம் என்பதை விளக்க கீழ்மகன், ஏழை, அறிவிலி என எண்ணாமல் குகனோடு நட்புறவு கொண்டான் இராமன்.

அரக்கர் குலத்தவன் என்ற எண்ணம் இல்லாமல் விபீஷணன் சரணாகதி அடைந்தபோது அவனோடு தோழமை கொண்டவன் இராமன் எனத் திருமங்கையாழ்வார் சிறப்புப்படுத்தியுள்ளார்.

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது

இரங்கிமற்று அவற்குஇன் அருள் சுரந்து

மாவை மான் மடநோக்கி உன் தோழி

உம்பி எம்பி என்று ஒழிந்திலை உகந்து

தோழன் நீ எனக்கு" (Kamalanathan, 2002)

எனவும்,

"கல்ஆர் மதிள்சூழ் கடி இலங்கைக் கார் அரக்கன்

வில்லானை செல்ல விபீடணற்கு வேறாக

நல்லானை நாடி நறையூரில் கண்டேன"

எனப் பாடியுள்ளார் (Kamalanathan, 2002).

## முடிவுரை

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று அறமாகும். அன்பாய் இருந்து அடக்கமுடன் சினம் கொள்ளாமல் பெரியோரை மதித்து ஒருவனுக்கு ஒருத்தி என்பதனை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். நல்ல செய்திகளைக் கேட்டு நல்ல நூல்களைக் கற்று இறைவனைச் சரணாகதி எனத் தஞ்சம் அடைந்து வாழ்தல் சிறந்த அறம் என்பதாகும். இதனை வாழ்வில் சிரம் மேற்கொண்டு வாழ்ந்த இராமனின் அறத்தினை நாமும் பின்பற்றி இன்னல்கள் களையப்பட்டு இறைவனின் அருளைப் பெற்று நற்கதி அடைவோமாக.

## References

Kamalanathan, S.R. (2002) Nalayira Divya Prabhandham Uraiyudan, Varthamanan Pathippagam, Chennai, India.

Subramaniyan, Sa.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License